# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 80/2018**

**Deposition of Witness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுகுமாறன் | Caste | : | |
| Father/Husband Name | : | கருப்பையாத்தேவர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused absent petition filed and allowed )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.03.2026**

**முதல் விசாரணை**

நான் விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 04.04.2017ம் தேதி டி.இராநாதபுரத்திலுள்ள காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது மாலை 16.00 மணியளவில் நான் நிலைய பாராவிலும் காவலர் 2045 திரு.குமாராஜா நிலைய எழுத்தராகவும், முதல்நிலைய காவலர் 1671 திரு.குழந்தைவேல், கணினி பதிவு ஏழுத்தாராக இருந்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த செல்லையாபுரத்தை சேர்ந்த சின்ன அழகன் மகன் முருகன் என்பவர் நிலையம் வந்து தனது உறவினரான கடவுள் மகன் தங்கபாண்டி என்பவர் காவல் நிலையத்திற்குள் வந்து நிலைய எழுத்தர் திரு. குமாரராஜாவிடம் இந்த தங்கபாண்டி இரண்டு நாட்கள் அவருக்கு முக்கியமான வேலை இருக்கிறது நீங்கள் தான் அனுசரித்துகொள்ள வேண்டும் என்று கேட்டார். அதற்கு குமாரராஜா அனுசரிக்க முடியாது அது நீதிமன்ற உத்தரவின் பேரில் கையெழுத்து போட்டு வருவதால் அதில் நான் ஒன்றும் செய்ய

முடியாது என்று கூறினார். நான் இராணுவத்தில் பணிபுரிக்கிறேன் எனக்காக கொஞ்சம் அனுசரித்து போங்கள் என்று முருகன் கேட்ட போது குமாரராஜா யாருக்காவும் அனுசரிக்க முடியாது நீங்கள் நிலையத்தை விட்டு போங்கள் என்று கூறியதால் நிலையத்தில் இருந்து வெளியேறி வந்த முருகன் நிலையத்தின் முன்பு நின்றுகொண்டு குமாரராஜாவை பார்த்து ஏண்டா போலீஸ்கார தேவடியா மகன்களா நீங்கயெல்லாம் என்னடா வேலை பார்க்கிறீர்கள் நாங்கள் எல்லாம் ராணுவத்தில் எப்படி வேலை பார்க்குறேன் தெரியுமா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். உடனே அ.சா.1 வெளியே சென்று அவரை கண்டித்தார். அப்போது அ.சா.1ன்னை பார்த்து நீ ஏண்டா சொல்லுற என்று மீண்டும் மீண்டும் அசிங்கமாக பேசியதால் நானும் சாட்சி குழந்தைவேலும் நிலையத்திற்கு வெளியே வந்து நீங்கள் இராணுவத்தில் வேலை பாக்குறீங்கள் உங்கள் மரியாதையை காப்பாற்றி கொள்ளுங்கள் என்று சொன்னோம். அதற்கு முருகன் அவுசாரி மகன்களா இவனுக்கு சப்போட்டுக்கு வாறீங்களா வாங்கடா என்னை பிடிச்சு பாருங்கள் என்று கூறி அந்த இடத்தில் கீழே கிடந்த சென்ட்ரிங் கம்பியை எடுத்து என்னை தொட்டால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன்டா என்று மிரட்டினார். அப்போது அவரை பிடிக்க சென்ற போது மேற்படி கம்பியை தூக்கி கீழே எறிந்துவிட்டு அங்கிருந்து அவர் ஓடிவிட்டார். இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரியின் பெயர் விலாசத்தை சுமார் 20 நிமிடத்தில் விசாரித்து தெரிந்துக்கொண்டோம். அ.சா.1 புகாரை சார்பு ஆய்வாளரிடம் அரை மணி நேரத்தில் புகார் கொடுத்தார். புகாரை 10 நிமிடத்தில் அ.சா.1 எழுதி கொடுத்தார். சம்பவம் நடந்து அரை மணி நேரத்தில் சார்பு ஆய்வாளர்

நிலையம் வந்தார். எனது வாக்குமூலத்தில் மேற்படி தங்கபாண்டியின் மீது எந்த குற்ற வழக்கு இருந்தது என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி நிபந்தனை ஜாமீன் போட்டது சம்பந்தமாக உத்தரவு நகலையோ மற்றும் அவர் கையெபத்து செய்தற்கான ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் காவல் ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்யவில்லை, விசாரணை அதிகாரிக்கு தான் அதுபற்றி தெரியும். மேற்படி சார்பு ஆய்வாளர் வந்தவுடன் இந்த வழக்கு சம்பந்தமான அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையம் டி.இராநாதபுரம் மெயின் ரோட்டில் இருந்து கிழக்குபக்கம் உள்ளது என்றால் சரிதான். டி.இராநாதபுரம் மெயின் ரோட்டில் இருந்து காவல் நிலையம் செல்வதற்கு 250 அடி இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் காவல்நிலையத்திற்கு முன்பு வெளியே நடந்தது. சம்பவம் இடம் காவல் நிலையத்திற்கு 50 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் சுமார் 30 மீட்டர் தூரம் இருக்கும். எதிரி அசிங்கமாக பேசிய இடம் மக்கள் நடமாட்டம் இல்லாத இடம் என்றால் சரிதான். எதிரி கெட்ட வார்த்தை பேசி போது எங்களுக்கு அருவருப்பாகவும் முகம் சுழிக்கும் வகையிலும் இருந்ததாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரி ஏதாவது இடத்தில் என்னையும் அ.சா.1ன்னையும் காவல் நிலையத்திற்குள்ளே வைத்து எங்களை தாக்க முயற்சித்தாகவோ அல்லது மிரட்டியதாகவோ எனது வாக்குமூலத்திலுள்ளதா என்றால் இல்லை. எதிரி எங்களை பார்த்து நீங்கயெல்லாம் என்ன வேலை பாக்குறீங்கள் என்று சத்தம் போட்டார் என்று எனது வாக்குமலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிரி சத்தம் போட்டது தவிர எங்களது அரசு

பணியினை செய்யவிடாமல் தடுத்தார் என்று எனது வாக்குமூலத்தில் இல்லை என்றால் அ.சா.1 இதுபற்றி கூறியுள்ளார். அ.சா.1 சொன்னதன் அடிப்படையில் தான் எனக்கு விபரங்கள் தெரியும் என்றால் அவர் சொன்னதன் அடிப்படையில் நாங்கள் நிலையத்தில் இருந்து வெளியே வந்தோம். கம்பியை அந்த இடத்திலேயே கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார். கம்பியை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தபோது அதன் நீளம் அளவு , நிறம் ஆகியவற்றை சார்பு ஆய்வாளரிடம் குறிப்பிட்டேனா என்றால் இல்லை நாங்கள் அவரிடம் ஒப்படைத்தோம். நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் 04.04.2017ம் தேதி மாலை 4.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு வரவே இல்லை என்றும், கடந்த 04.03.2017ம் தேதியன்று எதிரி காவல்நிலையம் வந்து அ.சா.1யிடம் No Criminal case certificate அவருக்காக கேட்டுள்ளார் என்றும், அவரை ஒருமையில் அ.சா.1 பேசி அனுப்பியுள்ளார் என்றும், காவல் துறை என்றால் பொதுமக்களுக்கு தான் இருக்கிறது என்று சொன்ன எதிரி போய்விட்டார் என்றும், இதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதனால் கோபமடைந்த அ.சா.1 எதிரியின் பெயர் மற்றும் சம்பவ நாளையும், நேரத்தை நிரப்பாமல் விட்டுவிட்டு எதிரியை ஒரு மாதம் கழித்து நேரடியாக பார்த்த அ.சா.1 04.04.2017ம் தேதியன்று குற்ற வழக்கு இல்லை என்ற சான்றிதழ் தருவதாக எதிரியை காவல் நிலையத்திற்கு வரவழைத்து அவசரகதியில் ஏற்கனவே எழுதப்பட்ட புகாரை அ.சா.1 நிரப்பி எதிரியின் மீது புகார் கொடுத்ததில் அ.சா.1ற்காக நானும், கணினி பதிவாளரும் அவருக்கு ஆதரவாக செயல்பட்டு இயந்திரரீதியாக செயல்பட்டு வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் அ.சா.1ற்கும் எதிரிக்கும் சுமார் 10 நிமிடம் நடந்திருக்கும். மேற்படி சம்பவத்தை நாங்கள் அலைபேசியில்

வீடியோ எடுத்தும், காவல் நிலையத்திலுள்ள சிசிடிவி பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எதிரியுடன் ஆண்டவன் மகன் தங்கபாண்டியும் காவல்நிலையம் வந்தார்கள் என்று அ.சா.1ன் புகாரிலும் எனது வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் மேற்படி தங்கபாண்டி காவல்நிலையத்தில் இருந்தாரா என்றால் இல்லை. தங்கபாண்டியின் எந்த குற்ற வழக்கு எண் சம்பந்தமாக எதிரி காவல் நிலையம் வந்தார் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி தங்கபாண்டிக்கு ஆதரவாக உண்மையிலேயே எதிரி சிபாரிசு செய்திருந்தால் மேற்படி எதிரியிடன் தங்கபாண்டியும் காவல்நிலையத்திற்கு வந்திருப்பார் என்றும், வழக்கிற்காக பொய்யாகசாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் தலைமை காவலர் சுகுமாறன்,நான் ஆகியோர் சம்பவம் நடந்த போது காவல்நிலையத்தில் தான் இருந்தோம் என்றால் சரிதான். மேற்படி நபர்களும் விசாரணை அதிகாரியும் சேர்ந்து அனைத்து ஆவணங்களையும் பொய்யாக காவல்நிலையத்தில்வைத்து எதிரிக்கு எதிராக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்து நிலையத்திற்கு கொண்டு வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் நிலையம் கொண்டு வந்த பிறகு தெரியும். நான் சொல்வது போல் எதிரி கொலை மிரட்டல்விடுக்கவில்லை என்றாலும் புகார்தாரர் என்னுடன் பணிபுரிபவர் என்பதால் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் எங்களது அரசுபணியை தடுக்கும்அளவில் எதிரி எந்த செயலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.